DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.35/2025

PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | விசித்திரா (Lw - 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 12.08.2025**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், அலங்காநத்தத்தில் குடியிருந்து தனியார் மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் 1வது எதிரி எனது கணவர், ஆஜர் 2, 3 எதிரிகள் எனது மாமனார் மற்றும் மாமியார். (சாட்சி எதிரிகளை அடையாளம் காண்பித்தார்.)

ஆஜர் 1வது எதிரி எனக்கு எதிராக விவாகரத்து கேட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அதற்கான வாய்தா 10.02.2021ம் தேதி போடப்பட்டிருந்தது. நான் என்னுடைய பாட்டியின் வீட்டில் இருந்தேன். எனது அம்மா அ.சா.1 பூங்கொடி தோட்டத்தில் இருந்தார். அவர் தொலைபேசி மூலம் என்னை தொடர்பு கொண்டு தான் தோட்டத்தில் இருந்து வருவதாகவும் என்னை கிழம்பி வருமாறும் இருவரும் சேர்ந்து நீதிமன்றத்திற்கு செல்லலாம் என்று தெரிவித்திருந்தார்.

காலை சுமார் 8.30 மணியளவில் நான் எனது பாட்டி வீட்டில் இருந்தபோது எனது பாட்டி மூக்காயி என்னிடம் வந்து ஆஜர் எதிரிகள் எனது அம்மா பூங்கொடியை அடித்துகொண்டிருப்பதாக தகவல் சொன்னார். நான் உடனே ஆஜர் எதிரிகளின்

தோட்டத்தின் வழியாக செல்லும் மண் பாதையில் சென்று எனது அம்மாவை பார்த்தபோது எனது அம்மா கீழே விழுந்து கிடந்தார். ஆஜர் 1வது எதிரி மமுட்டி புடியைவைத்து கொண்டு கொல்லமல் விடமாட்டேன் என்று கூறிவிட்டு மமுட்டிபுடியை கீழே போட்டுவிட்டு மூன்று பேரும் அங்கு இருந்து சென்றுவிட்டார்கள்.

நான் எனது அம்மாவிடம் விசாரித்தபோது ஆஜர் எதிரிகள் மூன்று பேரும் நாங்கள் நீதிமன்றத்திற்கு போககூடாது என்றும் அப்படி போகவில்லை என்றால் ஆஜர் 1ம் எதிரிக்கு விவாகரத்து கிடைத்து வேறு திருமணம் செய்யலாம் என்று கூறி கையாலும் மமுட்டி புடியாலும் அடித்ததாக கூறினார். எனது அம்மாவிற்கு தலை, முதுகு, மற்றும் முலங்காலில் காயங்கள் இருந்தது அவரை சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலிசார் அங்கு வந்து விசாரித்தார்கள். எனது அம்மா 5 நாட்கள் உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது பாட்டிவீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் துாரம் சரியாக தெரியாது ஆனால் பயண தொலைவு 1/4 மணி நேரம் ஆகும். எனது பாட்டிக்கு யார் தகவல் கொடுத்தார் என்றால் எனது மாமா சொன்னார். எனது மாமா எங்கு குடியிருக்கிறார் என்றால் ஆஜர் எதிரிகளின் தோட்டத்திற்கு எதிரே குடியிருக்கிறார். எனக்கு தகவல் கிடைத்து சென்று பார்க்கும்போது ஆஜர் 1ம் எதிரி என்ன உடை அணிந்திருந்தார் என்றால் எனக்கு நினைவில் இல்லை. எனது அம்மா தோட்டத்தில் இருந்து எனது பாட்டி வீட்டிற்கு செல்வதற்கு சம்பவம் நடந்த இடம் அமைந்துள்ள ஒரு தடம் மட்டும் தான் உள்ளதா என்றால் ஆமாம். மேற்படி தடம் ஒத்தையடி பாதை என்றால் சரிதான். எனது அம்மா காட்டு பத்திரத்தை எதிரிகளிடம் ஆதரவாக கொடுத்துவிட்டு பணம் வாங்கியிருந்தோமா என்றால் இல்லை. என்னுடைய சித்தப்பா முறையுள்ள ஒருவரிடம் தான் பணம் வாங்கி அதற்கு ஆதரவாக காட்டு பத்திரத்தை கொடுத்து இருந்தோம் மேற்படி கடனை அடைக்க எதிரிகளிடம் பணம் பெற்று மேற்படி சித்தாவிடம் கடனை அடைத்து காட்டு பத்திரத்தை வாங்கி என் வசம் வைத்திருந்தேன், தற்போது மேற்படி காட்டு பத்திரம் எதிரிகள் வசம் உள்ளது. மேற்படி சம்பவத்தன்று எனது அம்மா மேற்படி பத்திரத்தை ஆஜர் எதிரிகளிடம் கேட்டு பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் எதிரிக்கும் எப்போது விவாகரத்து கிடைத்தது என்றால் எனக்கு அது பற்றிய விபரம் தெரியாது. கடந்த 30.06.2022ம் தேதி நாமக்கல்

குடும்பநல நீதிமன்றத்தில் எனக்கும் ஆஜர் 1ம் எதிரிக்கும் விவாகரத்து கொடுக்கப்பட்டு தீர்பு அளிக்கப்பட்டது என்றாலும் அதை தெரிந்துகொண்டே தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சம்பவம் தொடர்பாக எனது அம்மா சென்று பிரச்சனை செய்தது சம்மந்தமாக ஆஜர் எதிரிகள் எனது அம்மா மீது எருமபட்டி காவல்நிலையத்தில் புகார் அளித்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சென்று பார்க்கவில்லை என்றாலும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திற்கு பின்னிட்டு எனது அம்மா வரும் வழியில் தான் அவரை நான் சந்தித்தேன் என்றால் சரியல்ல. எனது அம்மாதான் ஆஜர் எதிரிகளிடம் பத்திரம் கேட்டு பிரச்சனை செய்துவிட்டு தற்போது பணம் கொடுக்காமல் அந்த பத்திரத்தை பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு தற்போது எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துவிட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowlweldge by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**